தினமலர்
உண்மையின் உரைகல்

உலக தமிழர் செய்திகள்

# சிங்கப்பூரில் இலவச தேர்வுப் பயிலரங்கு

பிப்ரவரி 18,2013 IST



சிங்கப்பூர் : ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கம் (சிங்கப்பூர் கிளை), பிப்ரவரி 17ம் தேதி அன்று காலை 10 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை "மாணவர்களுக்கான இலவச தேர்வுப் பயிலரங்கு" ஒன்றை மிகச் சிறப்பாக நடத்தியது. இருபது ஆண்டுகள் அனுபவம் பெற்ற கணினிப் பொறியாளரும், மன ஆற்றல் கொண்டு தூண்டப்படும் அறிதுயில் துறையில் பட்டயச் சான்றிதழ் பெற்றவருமாகிய விமலா, இப்பயிலரங்கை நடத்தினார். தேர்வுகளை நம்பிக்கையுடன் அணுகும் முறை, பயமின்றி செயல்படுதல், நேரம் நிர்வகித்தல், மன அழுத்தத்தை கையாளும் வழிமுறைகளைத் தெளிவாக விளக்கும் வண்ணம் இப்பயிலரங்கு நடத்தப்பட்டது. சுமார் ஐம்பது இந்திய மாணவர்களும் பெற்றோர்களும் இப்பயிலரங்கில் கலந்து கொண்டனர். கல்வி சார்ந்த சமுதாயப் பணிகளை பிரதான நோக்கமாகக் கொண்ட ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கம், சிங்கப்பூர் இந்திய மாணவர்களின் மேம்பாட்டிற்காக நடத்திய இப்பயிலரங்கு, பள்ளி மாணவர்களுக்கு பயனளிக்கும் வண்ணம் அமைந்திருந்தது. சங்கத்தின் துணைத் தலைவர் கலந்தர் மொஹிதீன் விழாவுக்கு தலைமை தாங்கினார். சங்கத்தின் செயற்குழு உறுப்பினர் பரீஜ் முஹம்மது வரவேற்புரை வழங்க, ஜனாப் ஜாவித் அஹமத் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார். செயற்குழு உறுப்பினர் பஷீர் அஹமது பயிலரங்கை தொகுத்து வழங்க, ஹபீபுர் ரஹ்மான் நன்றி கூறினார். மதிய உணவுடன், இந்நிகழ்ச்சி இனிதே நிறைவுற்றது.



